405

405

ஸ்ரீ

ஜைன தர்ம

முதற்பாட புத்தகம்

(ஹிந்தி புத்தகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 MAR 1944
MADRAS

352

திருப்புறம்பூர்

ஸ்ரீ அகளங்கர் அறிவுக் கழகத்தாரால்

வெளியிடப்பட்டது.

ஸ்ரீ அகளங்கர் அறிவுக் கழக வெளியீடு—2

ஓம் வீதராகாய நம:

ஜைன தர்ம
முதற்பாட புத்தகம்
(தமிழ் மொழிபெயர்ப்பு)
மூன்றும் வகுப்புக்குரியது

294·4

OFFICE OF THE REGISTRAR OF ...
03 MAR 1944
MADRAS

358

திரு. வி. நந்தகோபாலரால்
மொழி பெயர்க்கப்பட்டு
ஜைன பெரியோர்களால் திருத்தி யமைக்கப்பெற்றது.

வெளியிட்டவர்:
ஸ்ரீ அகளங்கர் அறிவுக் கழகத்தார்
திருப்பறம்பூர்
அசனமாபேட்டை போஸ்டு,
வட ஆற்காடு ஜில்லா.

1944

பதிப்புரிமை]

[விலை அணா 0-3-6

Q 3

முன்னுரை

நமது சமயக் கொள்கைகளையும் உண்மைகளையும் நம்மவர் தவிர ஏனையோரும் எளிதில் அறிந்துகொள்ளுமாறு சமய நூல்களை அச்சிட்டு வெளியிடவேண்டுவது நமது கடமையாகும்.

அப் பெரியார்களின் வழியைப் பின்பற்றியே யானும் இது போன்ற பாடப்புத்தகங்களை எழுதி வெளியிடவேண்டுமென்று **5, 6** வருடங்களாக எண்ணியிருந்தேன். அவ் ஆசையைப் பூர்த்திசெய்து இந் நூல் வரிசைகளை எளிய நடையில் மொழிபெயர்த்துத் தந்த ஆசிரியர், சித்தாமூர், வி. நந்தகோபாலன் அவர்களுக்கு எனது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். இதுபோன்று நம் தர்ம நூல்களைத் தமிழில் வெளியிட முன்வருமாறு ஜைன சமயப் பெரியார்களையுங் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந் நூலை வெளியிடுவதற்கான முறையில் பிழை திருத்தியுதவிய தமிழ்ப் பெரியார் பலருக்கும் எனது நன்றியறிதலை இருதயபூர்வமாகத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

முடிவாக, இவ் வரிசைகளை முறையே வெளியிடவும் அதற்கான பொருளுதவி புரிவதற்காகவும் முன்வந்து, எடுத்துக்கொண்ட காரியத்தை நிறைவேற்றி வைத்த, திருப்பறம்பூர் பதியில் தாபிக்கப்பட்டிருக்கின்ற "ஸ்ரீ" அகளங்கர் அறிவுக் கழகத்தின் அங்கத்தினர்களான திருப்பறம்பூர் வாசிகள் ஸ்ரீமான் இந்திரகுமாரநயினர் பாரியாள் திருமதி அம்மணியம்மாள் **1.** கும்பகோணம் ஸ்ரீ. சுரேந்திரநாத செட்டியார் பாரியாள், ஸ்ரீமதி சுகாவதியம்மாள் **2.** ஸ்ரீ எசோபத்திர நயினர் பாரியாள் மாது ஸ்ரீ சரஸ்வதியம்மாள் **3.** காஞ்சிபுரம், **T. A.** துரைசாமி நயினர் பாரியாள் திருமதி, ஸ்ரீ காந்தியம்மாள் **4.** டீச்சர், அப்பாசாமி நயினர் பாரியாள் ஸ்ரீமதி கம்சலையம்மாள் **5.** ஆக இவ்வைவருக்கும், மற்றுமுள்ள பெரியார்களுக்கும், அகளங்கர் அறிவுக் கழகத்தின் ஏனைய அங்கத்தினருக்கும் எனது நன்றி உரித்தாகுக.

இப்படிக்கு,

நெல்லியாங்குளம்—**பண்டித நாபிராஜன் ஜெயின்.**

ஆசிரியர்களுக்கு,

இந்த, ஜைன தர்ம முதற் பாடப் புத்தகங்கள், ஆரம்பப்பாடசாலை களில் கல்வி கற்கும் ஜைனச் சிறுவர்களுக்குப் பயன்படுமாறு தொகுக்கப்பட்டுள்ளன. இவற்றைப் போதிக்கும் ஆசிரியர்கள் பின் வருஞ் சில விஷயங்களைக் கவனிக்க வேண்டியிருக்கிறது அவை :—

(1) பாடங்களைப் பிள்ளைகளைக்கொண்டே படிக்கச் செய்ய வேண்டியது மன்றிப் படித்ததிலுள்ள கருத்துக்களைத் தெளிவாகச் சொல்லும்படி பயிற்றுவிக்க வேண்டும். படிக்கும்போது சிறுவர்கள் வாய்விட்டுப் படிக்க வேண்டியது. இடையில் பிழையில்லாமல் படிக் கின்றார்களா வென்று கவனிப்பது ஆசிரியர்களது அவசியமான கடமை.

(2) கூடுமானவரையிலும் வடமொழியி லுள்ள விஷயங்களைத் தமிழில் போதிக்கவேண்டியதுமன்றி, அவ் விஷயங்களைச் சிறுவர்கள் தெரிந்துகொண்டார்களா வென்று அப் போதைக்கப்போது பரீக்ஷித்துப் பார்க்க வேண்டும்.

(3) இப் புத்தகங்களிலுள்ள கடின வார்த்தைகளின் கருத்துக் களை தெளிவாக விளக்கி வைப்பதுடன், அவை போன்ற பல வார்த் தைகளையும் சிறுவர்கள் அறியுமாறு பல விஷயங்களைச் சொல்லிப் போதிக்கவேண்டும்.

(4) பயிற்சிமுறையில், பாடங்களில் சேர்த்துள்ள பயிற்சி களைப் பிள்ளைகளே செய்யும்படி இருப்பதால் அவர்களையே செய்யும் படி செய்வதுடன், இவை போன்ற புதுப் பயிற்சிகளைக் கற்பனையில் உண்டாக்கி அதைப் பிள்ளைகளைக்கொண்டு செய்வித்தால் அது அப் பிள்ளைகளைத் தாய்மொழியில் பிழையறப் பேசவும் எழுதவும் செய்யச் சுலபமாக விருக்கும்.

(5) கேள்விகள் கேட்கும் விஷயமாக, இந் நூல்களிலுள்ள கேள்விகளின்றி அதிகமான கேள்விகளைக் கோர்த்து, அக் கேள்வி களைக் கேட்டுப் பிள்ளைகளைத் தகுந்த பதில் தருமாறு பயிற்றுவிக்க வேண்டும்.

(6) பாடங்கள் மத சம்மந்தமாக மட்டிலும் இருப்பதால் பிள்ளைகளுக்கு வெளியுலக விஷயங்களை அடிக்கடி வாயினல் சொல்லிப் போதிக்க வேண்டும். அப்பொழுதுதான் அவர்களுக்குக் கல்வி பயன் பெறத்தக்கதாக விருக்கும்.

(7) இதில் வந்துள்ள சில 'குறட்பாக்களை' பிள்ளைகட்கு மனப் பாடமாகச் செய்வித்தால் அவை பயன் தரா எனவே அதன் கருத்துக் களைச் சிறு கதைகள் மூலம் போதிக்க வேண்டும்.

பொருளடக்கம்

பாடம்		பக்கம்
1.	தரிசனஸ்துதி ...	7
2.	ணமோகார மந்திரம் ...	8
3.	நிகழ்கால 24 தீர்த்தங்கரர்கள் ...	9
4.	உயிருள்ளனவும் உயிரில்லனவும் (ஜீவனும் - அஜீவனும்) ...	10
5.	ஜீவன்களின் பேதங்கள் ...	11
6.	பொறியும் புலனும் (இந்திரியங்கள்)	13
7.	ஐயறிவுள்ள ஜீவன்கள் ...	15
8.	விலங்கினங்களின் (த்ரஸ ஜீவன் களின்) பேதங்கள் ...	17
9.	தாவர ஜீவன்களின் பிரிவுகள் ...	19
10.	பஞ்சமகா பாபங்கள் ...	21
11.	கஷாயம் ...	24
12.	பிறவி அல்லது கதி ...	25
13.	அனுப்பிரேக்ஷை அல்லது பாவனை	28

1. தரிசன ஸ்துதி

யாவந்தி ஜிநசைத்யானி வித்யந்தே புவனத்திரயே
தாவந்தி ஸததம் பக்த்யா த்ரிப்பரீத்ய நமாம்யஹம் 1

தர்சனம் தேவதேவஸ்ய தர்சனம் பாபநாசனம்
தர்சனம் ஸ்வர்க்க ஸோபானம் தர்சனம் மோக்ஷஸாதனம் 2

தர்சனேன ஜிநேந்த்ராணாம் ஸாதூநாம் வந்தநேனச
நசிரம் திஷ்டதேபாபம் சித்ரஹஸ்தே யதோதகம் 3

வீதராகமுகம் திருஷ்ட்வா பத்மராக ஸமப்பிரபம்
நைகஜன்ம கிருதம் பாபம் தர்சனேன விநச்யதி 4

தர்சனம் ஜிநஸூர்யஸ்ய ஸம்ஸார த்வாந்தநாசனம்
போதனம் சித்தபத்மஸ்ய ஸமஸ்தார்த்த பிரகாசனம் 5

தர்சனம் ஜிநசந்த்ரஸ்ய ஸத்தர்மாம்ருத வர்ஷணம்
ஜன்மதாஹ விநாசாய வர்த்தனம் ஸுகவாரிதே : 6

ஜீவாதிதத்வப் பிரதிதர்சகாய ஸம்யக்த்வமுக்யாஷ்ட குணாஸ்ரயாய
பிரசாந்தரூபாய திகம்பராய தேவாதிதேவாய நமோஜிநாய 7

சிதாநந்தைக ரூபாய ஜிநாய பரமாத்மனே
பரமாத்மப் பிரகாசாய நித்யம் ஸித்தாத்மனேநம : 8

அனந்தானந்த ஸம்ஸார ஸந்ததிச்சேத காரணம்
ஜிநராஜ பதாம்போஜ ஸ்மரணம் சரணம் மம 9

அன்யதா சரணம்நாஸ்தி த்வமேவ சரணம் மம
தஸ்மாத் காருண்யபாவேன ரக்ஷரக்ஷ ஜிநேஸ்வர 10

ஜிநதர்ம விநிர்முக்தம் மாபவம் சக்ரவர்த்யபி
ஸசந்த்தோபி தரித்ரோபி ஜிநதர்மே நிவாஸநம் 11

ஜன்ம ஜன்ம க்ருதம்பாபம் ஜன்மகோடி ஸமார்ஜிதம்
ஜன்ம மிருத்யு ஜரா மூலம் ஹந்யதே ஜிநதர்சனாத் 12

நஹித்ராதா நஹித்ராதா நஹித்ராதா ஜகத்திரயே
வீதராகாத் பரோ தேவோ நபூதோ ந பவிஷ்யதி 13

ஜிநே பக்திர் ஜிநே பக்திர் ஜிநே பக்திர் தினே தினே
ஸதாமேஸ்து ஸதாமேஸ்து ஸதாமேஸ்து பவே பவே 14

விக்னௌகா : பிரளயம் யாந்தி சாகிநீ பூதபன்னகா :
விஷம் நிர்விஷதாம் யாதி ஸ்தூயமானே ஜிநேஸ்வரே. 15

2. ணமோகார மந்திரம்

ணமோ அரஹந்தாணம் ணமோ உவஜ்ஜாயாணம்
ணமோ சித்தாணம் ணமோ ளோயே ஸவ்வ
ணமோ ஆயிரியாணம் ஸாஹூணம்

கருத்து:—அரஹந்தர்களுக்கு நமஸ்காரம், சித்தர்களுக்கு நமஸ்காரம், ஆச்சாரியர்களுக்கு நமஸ்காரம், உபாத்தியாயர்களுக்கு நமஸ்காரம், சர்வ சாதுக்களுக்கு நமஸ்காரம். இம் மந்திரத்தைச் சகல காரிய ஆரம்பத்திலும் சொல்ல வேண்டும்.

அரஹந்தர், சித்தர், ஆச்சாரியர், உபாத்தியாயர், சர்வ சாதுக்கள் ஆகிய இவர்களுக்குப் பஞ்ச பரமேட்டிகளென்று பெயர்.

ணமோகார மந்திரத்தின் மகிமை

எசோ பஞ்சணமோயாரோ சவ்வ பாவப்பணாசனே
மங்களாணஞ்ச சவ்வேசிம் படமம்ஹோயி மங்களம்.

அதாவது, இந்தப் பஞ்ச நமஸ்கார மந்திரம் சகல பாபங்களையும் நாசஞ் செய்வதுடன், சகல மங்களங்களிலும் தலைசிறந்த மங்களமாக இருக்கிறது.

பயிற்சி

1. **பொருள் தெரிந்துகொள்:**—பரமேட்டி - பரமேஷ்டி, மங்களம் - நன்மை, தலைசிறந்த - மிக மேன்மையான.

2. **விடை என்ன?**
   (1) ணமோகார மந்திரத்தில் எவரெவருக்கு நமஸ்காரம் செய்யப்பட்டிருக்கிறது?
   (2) பரமேட்டிகள் பெயரென்ன?
   (3) ணமோகார மந்திரத்தின் மகிமையென்ன?
   (4) நீ இந்தப் பாடத்தில் தெரிந்துகொண்டது என்ன?
   (5) பஞ்ச நமஸ்கார மந்திரத்தை எப்பொழுது சொல்ல வேண்டும்?

3. நிகழ்கால 24 தீர்த்தங்கரர்கள்

1.	ஸ்ரீ விருஷப	13.	விமல
2.	அஜித	14.	அனந்த
3.	சம்பவ	15.	தர்ம
4.	அபிநந்தன	16.	சாந்தி
5.	சுமதி	17.	குந்து
6.	பத்மப்பிரப	18.	அர
7.	சுபார்ஸ்வ	19.	மல்லி
8.	சந்திரப்பிரப	20.	முனிஸுவிரத
9.	புஷ்பதந்த	21.	நமி
10.	சீதள	22.	நேமி
11.	ஸ்ரேயாம்ஸ	23.	பார்ஸ்வ
12.	வாசுபூஜ்ஜிய	24.	ஸ்ரீ வர்த்தமான

இவர்களில் ஸ்ரீ விருஷபரை ஆதிநாத ரென்றும், புஷ்ப தந்தரை சுவிதி நாத ரென்றும், ஸ்ரீ வர்த்தமானரை மஹாவீர ரென்றும், சன்மதி யென்றும் வீரர் அல்லது அதிவீர ரென்றும் அழைக்கின்ரோம்.

இத் தீர்த்தங்கரர்களில் ஸ்ரீ வர்த்தமான ரென்பவர் சுமார் 2469 வருடங்களுக்கு முன்பு இருந்தவர். இவர் முக்தியடைந்த நாளிலிருந்து வீர நிர்வாண சகாப்த வருடங்கள் கணக்கிடப்பட்டு வருகின்றன. தீபாவளித் திருநாளே அவர் முக்தியடைந்த நாள் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். நாம் காலத்தைக் குறிப்பிட்டு எழுதும் பொழுது வீர நிர்வாண சகாப்த மென்றும் கூட்டி எழுதுகின்ரோம். ஸ்ரீ வர்த்தமானருக்கு முன், 23 தீர்த்தங்கரர்கள் முறையே இருந்து வந்திருக்கிருர்கள்.

பயிற்சி

1. கண்டுபிடி:—4, 7, 11, 14, 19, 22 வது தீர்த்தங்கரர் களின் பெயர்கள் யாவை?
2. ஒரு பெயருக்கு அதிகமான பெயருடைய தீர்த்தங் கரர்களேயும், அவர்களுடைய மறுபெயர்களேயும் வரிசைப்படி எழுது.
3. வாசுபூஜ்ஜியருக்கு முன்பும், அவருக்குப் பிறகுந் தோன்றி யிருப்பவர்களான தீர்த்தங்கரர்களது பெயர்கள் யாவை?
4. உனக்கு எதிர்கால தீர்த்தங்கரர்களின் பெயர்கள் தெரியுமா? தெரியாவிடில் ஆசிரியரிடம் கேட்டுத் தெரிந்துகொள்.
5. எதிர் வார்த்தைகள் கண்டுபிடி:—
முன்னல், ஆரம்பம், வா, இருக்கிற; நன்மை அழிப் பது.

---

4. உயிருள்ளனவும் உயிர் இல்லனவும்.

(ஜீவனும்—அஜீவனும்)

ஜீவனுக்கு 10 திரவ்யப் பிராண னுண்டு. அதாவது, ஐம்பொறிப் புலன்களேயும், மன வசன, காயம் என்னும் மூன்று பலங்களேயும், ஆயுளே யும் ஸ்வாஸோச் வாஸ மென்னும் மூச்சுவிட்டு மூச் சுவாங்குகிற தொழிலேயும், ஆக மேற்சொன்ன 10 வித திரவ்யப் பிராணணேயும் பெற்று இருப்பது ஜீவன்.

மனிதன், தேவன் நரகர், போன்றவர்களேயும், மிருகங்கள், பட்சியினங்கள் போன்ற இவற்றையும் ஜீவன்க ளென்கிறேம். அதாவது, உண்டு, உறங்கி, நடந்து, பறந்து, தத்தித் திரியும், மனிதன் முதல் எறும்பீருக வுள்ள சகலமும் ஜீவன்க ளாகும்.

அஜீவனுவது :—சேதன சக்தியும், பிராணனும் இல்லாத கட்டை, உற்பத்தி யிடத்தினின்று பிரித் தெடுத்த தாதுப்பொருள் போன்றனவாகும். அதா வது, இப் பொருள்களுக்கு ஜீவன்கள் கிடையா. இப் படிப்பட்ட பொருள்களை நாம் அஜீவன்கள் என்கி ரோம்.

இந்தப் பாடத்தில் நீங்கள் வாசித்துத் தெரிந்து கொண்ட ஜீவ, அஜீவன்களில் பல பேதங்க ளிருக்கின் றன. அப் பேதங்கள் யாவை யென்று அடுத்து வரும் பாடத்தைப் படித்துத் தெரிந்துகொள்ளுங்கள்.

அப்பியாசம்

1. (1) 10 பிராணன்கள் என்ருல் எவை? தெளிவாக விளக்கு.
   (2) ஜீவனுக்கும் அஜீவனுக்குமுள்ள பேதமென்ன?
   (3) ஜீவனைப்பற்றி அறிந்துகொண்டது என்ன?
2. பின்வரும் சொற்ருெடரில் உள்ள பொருள்களி லிருந்து ஜீவ அஜீவனையுடைய பொருள்களைப் பிரித்து எழுது.

விறகு, பசு, மரம், மலை, முத்து, நாற்காலி, தங்க நகை; பச்சைக்கிளி, வைரக்கல், வெள்ளி நாணயம், மரப்பலகை, பவழம், ஆமை, கடியாரம், விசை வண்டி, கொசு, ஆகாய விமானம், அரு நிழல், வண்டு.

---

5. ஜீவன்களின் பேதங்கள்

ஜீவன்கள் இரண்டு வகைப்படும். ஒன்று முக்த ஜீவன், மற்ருென்று சம்சார ஜீவன். இவற்றில், உலகி லிருந்து விடுபட்டு மோக்ஷமடைந்து அங்குள்ள சதா உண்மையான பேரின்ப சுகத்தை அடைந்து மறுபடி யும் உலகத்திற்கு வராமல் இருக்கிற ஜீவனுக்கு முக்த ஜீவ னென்று பெயர்.

முக்த ஜீவனுக்கு நேர்மாருக, பிறப்பு, இறப்பு என்னும் பெருந் துக்கத்தை அனுபவித்துக்கொண்டு, உலகில் உலவுகின்ற ஜீவனுக்குச் சம்சார ஜீவன் என்று பெயர்.

இந்தச் சம்சார ஜீவன், ஈரறிவு முதல் ஐயறிவீருகவுள்ள த்ரஸ ஜீவனெனவும், ஓரறிவுடைய நெருப்பு, நீர், பூமி, போன்ற தாவர ஜீவனெனவும் இரண்டுவித பேதங்களைப் பெற்றிருக்கின்றது.

இவற்றில், தம்மிஷ்டப்படி உலவியும் ஆகாரத்திற்கு அலைந்தும், ஆபத்து நேர்ந்தபோது பயந்தும் இருக்கின்ற ஜீவன்களுக்குத் திரஸ ஜீவன்கள் என்று பெயர்.

அதாவது, நத்தை, எறும்பு, ஈ, குதிரை, எருது முதலிய, 2, 3, 4, 5 அறிவு அல்லது பொறிப் புலன்களை யுடைய அனைத்தும் திரஸ ஜீவன்களே யாகும்.

மனிதனும் இந்தத் திரஸ ஜீவனுகவே இருக்கின்ருன். ஏனெனில், அவனும் ஐம்பொறிப் புலன்களைப் பெற்றிருக்கின்றமையால்.

பிறந்தும், வளர்ந்தும், இறந்தும், தனக்குத் தானே உலாவ அல்லது இடம் விட்டு இடம் நகர முடியாத தாவரம்போன்ற ஒரு பொறிப்புலனை மாத்திர முடைய மரம், செடி, கொடி, புல், பூண்டு முதலியன வெல்லாம் தாவர ஜீவன்களே யாகும்.

பயிற்சி

1. **பொருளறிந்துகொள் :—**

தாவரம் - மரம், செடி, கொடி முதலியன, சேதனம் - அசைவு, புலன் - அறிவு, காயம் - சரீரம், பிராணன் - உயிர், இனம் - சாதி, பேதம் - வித்தியாசம், ஸம்சாரம் - உலகம்.

2. **விடைசொல் ;—**

(1) தாவர ஜீவனுக்கும், திரஸ ஜீவனுக்கும் உள்ள வித்தியாசத்தை உதாரணத்துடன் விளக்கு.

(2) நீ பார்க்கும் ஜீவன்களனைத்தும் சம்சார ஜீவன்களா ?

(3) மனிதன் எந்த ஜீவ இனத்தைச் சேர்ந்தவன் ?

(4) உனக்குத் தெரிந்த தாவர ஜீவன்களில் 10 பெயர்களை எழுது ?

---

6. பொறியும் புலனும்

(இந்திரியங்கள்)

இவைகளில் அறிவு எதன் துணைகொண்டு வெளி யுலகத்தை அறிகின்றதோ, அல்லது அறிவுக்கு வெளி யுலகத்தைப் புலப்படுத்திக் காட்ட எது கருவியாக இருக்கிறதோ அதற்குப் பொறி அல்லது இந்திரிய மென்று பெயர்.

இந்திரியங்கள் ஐந்து. அவை மெய், வாய், மூக்கு, கண், காது என்பனவாம். இவை வடமொழியில் ஸ்பரிஸன இந்திரியம், ரசன இந்திரியம், க்ராண இந்திரியம், சக்ஷு இந்திரியம், கர்ன இந்திரியம் என்று சொல்லப்படுகின்றன.

மெய்ப்பொறிப் புலனாவது :—

கனமின்மை, கனம், வறட்சி, வழவழப்பு, கடினம், மிருது, குளிர்ச்சி, சூடு என்னும் இவ்வெட்டுக் குணங்களையும் அறிவதற்கு அறிவுக்குத் துணையாக உள்ளது எதுவோ அதற்கு மெய்ப் பொறிப் புலனென்று பெயர். அதாவது, நாம் எதன் வழியாக மேற்சொன்ன எட்டுவித குணங்களையும் அறிகின்றோமோ அவ் வழிக்குப் பெயர்.

ஒருவன் மேற்சொல்லியுள்ள எட்டுக் குணங்களை யும் தனது சரீரத்தால் அறிகின்முன். எனவே, தனது சரீரமே அவனுக்கு மெய்ப்பொறிப் புலனுக இருக் கிறது. இப்படியே ஒவ்வொரு பொறிக்கும் தெரிந்து கொள்ளவும்.

2. ரஸன இந்திரியம் அல்லது வாய்ப்பொறிப் புலனுவது, புளிப்பு, இனிப்பு, கசப்பு, காரம், துவர்ப்பு என்னும் ஐந்துவித சுவைகளையும் எவ்வழி யாக அறிந்துகொள்ளுகின்ருேம்? வாயின் வழியாக, அல்லது நாக்கின் வழியாக அன்ருே? எனவே, இந்த வாய் அல்லது நாக்குக்கு ரஸன இந்திரிய மென்று பெயர் ஏற்பட் டிருக்கிறது. சுவை ஆறுவிதம் என்று சொல்லுவதுண்டு. உவர்ப்பு என்னும் சுவை மற்ற சுவைகளுடன் கலந்திருப்பதால் அதை எடுத்துக் கொள்ளவில்லை.

3. **க்ராண இந்திரியமாவது** :—நறு நாற்றத்தையும், துர்நாற்றத்தையும் அறிவிக்கும் பொறிப்புலன் மூக்கு. ஆகையால் இந்தப் பொறிப்புலனுக்குக் க்ராண இந் திரிய மென்று பெயர் கொடுக்கப்பட் டிருக்கிறது.

4. **சக்ஷு இந்திரியமாவது** :—கறுப்பு, மஞ்சள், நீலம், சிகப்பு, வெண்மை எனும் இவ் வைந்து நிறங் களையும் இவற்றின் கலப்பாலான பலவிதமான நிறங் களின் பேதா பேதங்களையும் எப்பொறியின் வாயி லாக அறிந்துகொள்ளுகிருேமோ அப் பொறிப் புல னுக்குக் கட்பொறிப் புலன் அல்லது சக்ஷு இந்திரிய மென்று பெயர்.

5. **கர்ன இந்திரியமாவது** :—ஜீவ ராசிகளால் ஆக் கப்படும் சப்தங்களையும் அவற்றின் பேதங்களையும், வாத்தியம் முதலியவற்ருலேற்படுத்தப்படும் சப்தங்

களேயும் அவற்றின் பேதங்களேயும் அறியும் கருவியாக வுள்ள பொறிக்குக் காதுப் பொறிப்புல னென்று பெயர். இதை வடமொழியில் கர்ன இந்திரிய மென்று சொல்லப்படுகிறது.

பயிற்சி

(1) பின்வரும் வார்த்தைகளின் பொருள்களேத் தெரிந்துகொள்க :—

பொறி-இந்திரியம், நறுநாற்றம்-வாசனே, பேதம்-வித்தியாசம், கலப்பு—பல பொருள்களே ஒன்ருய்க் கலத்தல், வடமொழி-சமஸ்கிருத பாஷை, சுவை-ருசி.

(2) பின்வரும் வார்த்தைகளேப் பிரித்தெழுதுக :—

கட்புலன், மெய்யறிவு, கனமின்மை, வெளியுலகம்.

(3) விடை சொல்லு :—

(1) பொறிப் புலனென்ருல் என்ன ?
(2) பொறிப் புலன்கள் எத்தனே ?
(3) தனித் தனிப் பொறிப் புலனுடைய தொழி லென்ன ?
(4) ஐம்பொறிப் புலன்களுக்கும் வடமொழியி லென்ன பெயர் ?
(5) உணர்ச்சி அல்லது ஸ்பரிசத்தில் எத்தனே வகையுண்டு ?
(6) முக்கிய நிறங்கள் எத்தனே ?
(7) சுவை அல்லது ருசி எத்தனே ? அவற்றின் பெயர்களென்ன ?

---

7. ஐயறிவுள்ள ஜீவன்கள்

ஓரறிவு ஜீவன்கள் :—ஸ்பரிசம் அல்லது உணர்ச்சியை மாத்திரம் உடைய பிருதிவி, நெருப்பு, காற்று, தாவரம் முதலியனவும், பிறவும் ஓரறிவுடைய ஜீவன்களாகும்.

ஈரறிவு ஜீவன்கள் :—மெய்யறிவும், வாயறிவுமுடைய நத்தை, ஆமை, சங்கு முதலியனவும், இப்

படி அனேகவித ஜீவன்களும் ஈரறிவுடைய ஜீவன்களாகும்.

மூவறிவுள்ள ஜீவன்கள் :—மெய், வாய், மூக்கு எனும் இம் மூன்று பொறிகளையுமுடைய புழு, பூச்சி, பேன் முதலியனவும், மற்றும் பலவும் மூவறிவுள்ள ஜீவன்க ளாகும்.

நாலறிவுடைய ஜீவன்கள் :—மெய், வாய், மூக்கு, கண் என்னும் இந் நான்கு பொறிகளையும் பெற்றிருக்கும் வண்டு, ஈ, கொசு போன்றனவும் பிறவும் நாலறிவுடைய ஜீவன்க ளாகும்.

ஐயறிவுடைய ஜீவன்கள் :—மெய், வாய், கண், மூக்கு, காது ஆகிய இவ் வைந்து பொறிகளையுமுடைய விலங்கினங்களான ஆடு, மாடு, குதிரை, முதலியனவும் ஐயறிவுடைய ஜீவன்களே. மனிதன், தேவன், நரகன் போன்றவர்களும் ஐயறிவைப் பெற்றிருக்கின்ருர்கள். எனவே, இவர்களும் ஐயறிவுடைய ஜீவர்களே ஆவார்கள்.

பயிற்சி

1. ஓரறிவு முதல் ஐயறி வீருகவுள்ள ஜீவன்களில், ஒவ்வொன்றிலும் ஐந்தைந்து ஜீவன்களைத் தெரிந்து கொள்.
2. நீ எத்தனை அறிவுடைய ஜீவனுக இருக்கின்ருய்?
3. கொசு எத்தனை அறிவுகள் பெற்றிருக்கின்றது?

பின்வரும் பதில், எந்தக் கேள்வியைக் கேட்டால் கிடைக்கும். என்பதைக் கண்டுபிடித்து அக் கேள்வியை எழுது:—

(1) ஆம், விலங்கினங்களில் சில ஐயறிவுடைய ஜீவன்களே.

(2) கொசு, ஈ, வண்டு முதலியன நான்கறி வுடைய ஜீவன்கள்.

(3) தேவனும், மனிதனும் நாலறிவுபெற்றவர்களல்லர்.

(4) காற்றுக்கும் நெருப்பிற்கும் ஓரறிவு உண்டு.

8. விலங்கினங்களின் (அல்லது த்ரஸ ஜீவன்களின்) பேதங்கள்

த்ரஸ ஜீவன்கள் முறையே 2, 3, 4, 5 பொறிப் புலன்களைப் பெற்றிருக்கின்றன. அதாவது, அவை நான்கு பிரிவாக இருக்கின்றன. இவற்றில் 2, 3, 4 இந்திரியங்களை மட்டிலும் உடைய ஜீவன்களுக்கு விகலத்திரய ஜீவன்களென்று பெயர். இவற்றை யன்றி ஐந்து இந்திரியங்களையும் உடைய ஜீவன்களுக் குப் பஞ்சேந்திரிய ஜீவன்கள் என்று பெயர்.

பஞ்சேந்திரிய ஜீவன்களிலும் மூன்று பிரிவுகள் உண்டு. அவை, முறையே, நீர் வாழ்வன, நிலம் வாழ் வன, பறப்பன என்பனவாம். இப் பெயர்களை வட மொழியில், ஜலசரஜீவன், தலசரஜீவன், நபசரஜீவன் என்று சொல்லுவ துண்டு.

இவற்றில், நீரிலே அன்றி வேறிடத்தில் தங்கி உயிர் வாழ முடியாத மீன், ஆமை, பாம்பினங்களில் சில, ஆகிய இந்த ஜீவன்களுக்கு நீர்வாழ்வன அல்லது ஜலசரஜீவன் என்று பெயர்.

நிலத்தில் அதாவது பூமியில் மாத்திரம் தங்கி வசித்துத் திரிகின்ற விலங்கினங்களான ஆடு, மாடு, குதிரை, நாய், பூனை முதலியனவற்றிற்குத் தலசர ஜீவன்கள் என்று பெயர்.

ஆகாயத்தில் பறந்து திரிகின்ற காக்கை, கழுகு, கிளி, புறா முதலிய பறவையின ஜீவன்களுக்குப் பறப்பன அல்லது நபசரஜீவன்கள் என்று பெயர்.

மேற்சொன்ன பலதிறப்பட்ட ஜீவன்களில், ஐந்து அறிவுகளையும் பெற்றுள்ள பஞ்சேந்திரிய ஜீவன்களிலும் 2 பிரிவுண்டு. அவை, (1) சம்ஜ்ஞீ

என்னும் சைனீஜீவனும், (2) அசம்ஜீ என்னும் அசைனீஜீவனு மாகும். இவற்றில் பகுத்தறிவாகிய மெய்யறிவைப் பெற்றுள்ள ஜீவன்களுக்குச் சம் ஜீவன்க ளென்பனப் பெயர். அதாவது சூக்ஷமமாகிய மனத்தையுடைய ஜீவன்களுக்குப் பெயர். ஜீவன்கள் என்று மெய்யறிவைப் பெருமலிருக்கின்ற ஜீவன் களுக்கு அசம்ஜீ பெயர்.

நாமிடுகிற கட்டளைகளைத் தெரிந்துகொண்டு அதன்படி நடந்துகொள்ளச் சக்தியும், மனதுமுடைய விலங்கினங்களிற் சில (ஆடு, மாடு, ஒட்டகம், யானை, குரங்கு முதலியன) மெய்யறிவு படைத்த ஜீவன்க ளாகும். இவையன்றி, ஐந்துவிதமான அறிவுடன் இருக்கும் மனிதன், தேவன், நரகன் முதலானவர் களும் மெய்யறிவாகிய மனத்தையுடைய ஜீவர்களே யாவார்கள்.

அறிவற்றனவும், நாம் சொல்லுகிறபடி கேளா தனவும், பெரும்பாலும் ஆண் பெண் சேர்க்கையி னுல் உண்டாகாதனவும் ஆகிய நீரில் வசிக்கின்ற பாம்பினங்களிற் சிலவும், சில கிளிகளும் அறிவற்ற ஜீவன்களாம்.

பயிற்சி

1. பதிலெழுது :—

(1) விகலத்திரய மென்றுல் என்ன?

(2) ஐந்து அறிவுகளையும் பெற்ற ஜீவன்களில் எத்தனைப் பிரிவு உண்டு?

(3) சைனீ, அசைனீ ஜீவன்களின் பேதங்களை உதா ரணத்துடன் விளக்கு.

(4) ஜலசர, தலசர, நபசர ஜீவன்களுக்குத் தமிழ்ப் பெயரென்ன?

2. பொருள் தெரிந்துகொள்க :—

1. சம்ஜீ ஜீவன் மெய்யறிவுடைய ஜீவன், அசம்ஜீ ஜீவன் பகுத்தறி வில்லாத ஜீவன்.
2. நீர்வாழ்வன, நிலம்வாழ்வன, பறப்பன என்னும் ஜீவ இனங்களில் ஒவ்வொன்றிலும் உனக்குத் தெரிந்தவற்றைப் பிரித்தெழுது.

---

9. தாவர ஜீவன்களின் பிரிவுகள்

ஓரறிவாகிய உணர்ச்சிப் புலனைமட்டிலும் உடைய தாவர ஜீவன்களில் ஐந்து பிரிவுகள் உண்டு. அவைகளாவன :—

1. பிருதிவிகாய ஜீவன் (பூமி)
2. ஜலகாய ஜீவன் (நீர்)
3. அக்னிகாய ஜீவன் (நெருப்பு)
4. வாயுகாய ஜீவன் (காற்று)
5. வனஸ்பதிகாய ஜீவன் (தாவரம்)

1. இவற்றில், பிருதிவியையே தனக்குச் சரீர மாக வுடைய மண், கல் முதலியனவும், அப்பிரகம், இரத்தினம், தங்கம், வெள்ளி முதலான கனிகளி லிருந்து கிடைக்கும் உலோகப் பொருள்களும், பிருதிவிகாய ஜீவன்க ளாகும். ஆயினும், உற்பத்தி இடங்களிலிருந்து பிரித்தெடுத்த பிறகு மேலே சொல் லப்பட்ட பொருள்களுக்கு ஜீவன்கள் இரா.

2. ஜலத்தையே தனது சரீரமாகவுடைய ஜலம், ஆலங்கட்டி, பனிக்கட்டி முதலியனவற்றிற்கு ஜல காய ஜீவன்களென்று பெயர்.

3. அக்கினியையே தன் சரீரமாகவுடைய ஜ்வாலை, மின்சாரம், நெருப்பு முதலியனவற்றிற்கு அக்கினிகாய ஜீவன்க ளென்று பெயர்.

4. வாயுவையே சரீரமாகவுடைய காற்று வாயு காய ஜீவனாகும்.

5. தனக்குத் தானே சரீரமாகவுடைய மரம், செடி, கொடி, புல், பூண்டு, பூ, பழம், வேர், மூலிகை வகை என்கின்ற இவைகள் வனஸ்பதிகாய ஜீவன்க ளாகும்.

பயிற்சி

1. கோடிட்ட இடங்களில் தகுந்த வார்த்தைகளைச் சேர்த்து எழுது.

(1) தாவர——ஐந்து——உண்டு.

(2) உற்பத்தி யிடங்களிலிருந்துப்——இவைகளில் ——இரா.

(3) நெருப்பு——காய——?

(4) திரஸ——ல் நான்கு——உண்டு——என்ன ?

(5) சேதன——உடையது——.

(6) பிராணன்————முதலியவற்றை உயிரற்றன வென்கிறார்கள்.

(7) ஸ்ரீவர்த்தமானருக்கு——என்றும் —— என்றும் ——உண்டு.

2. பொருள் என்னவென்று தெரிந்துகொள் :—
பொருள் - கருத்து, காயம் - சரீரம், உணர்ச்சி - ஸ்பரிசம், வனஸ்பதி - தாவரம், உலோகப்பொருள் - தாதுப்பொருள், கனி - சுரங்கம், ஆலங்கட்டி - கோடை மழையுடன் கலந்துவிழும் சிறிய பனிக் கட்டித்துண்டு, அப்பியாசம் - பயிர்ச்சி.

3. பதிலெழுது :—

(1) ஓரறிவுடைய ஜீவனுக்கு வடமொழிப் பெய ரென்ன ?

(2) ஐவகையான தாவர ஜீவன்களின் பெயர்களைத் தனித்தனியாகப் பிரித்தெழுது. ஒவ்வொன்றுட னும் அதனுடைய குணத்தையும் சேர்த்து எழுது.

(4) மேகத்தில் நிறைந்திருக்கும் பொருள் என்ன ?

வெங்காயம், பூசுணைக்காய், தேங்காய், வாழைத் தண்டு, தொட்டால் சிணுங்கி முதலியன எந்தக் காய ஜீவன்கள் ?

10. பஞ்சமஹா பாபங்கள்

மனிதன் தினப்படி செய்கின்ற காரியங்களில் பாபங்கள் நிறைந்திருக்கின்றன. அப் பாபங்களைப் பெரியார்கள் 1. கொலை, 2. பொய், 3. திருடு, 4. கெட்ட நடத்தை, 5. பரிக்ரஹம் என்னும் ஐந்து பிரிவுகளாகப் பிரித்து இருக்கின்றார்கள்.

1. தன்னுடைய அல்லது மற்றவர்களுடைய பிராணனைப் போக்குதல் அல்லது அப் பிராணனைப் போக்க முயற்சித்தல் போன்ற செயல்களுக்குக் **கொலை** என்று பெயர். மேற்சொன்ன காரியங்களைச் செய்கிறவனை அல்லது செய்தவனைக் கொலைக்காரன் என்றும், தயவற்றவன் என்றும் அழைக்கின்றோம். ஆகையால்தான் கொலை செய்தல் கூடாது என்றும், கொலை செய்யாமல் இருந்தால் அது எல்லாவிதமான பேற்றையுந் தரும் என்றும் திருக்குறளில் பின்வருங் குறட்பாவை எழுதி இருக்கின்றார்.

"அறவினை யாதெனிற் கொல்லாமை கோறல்
பிறவினை யெல்லாந் தரும்." —**திருக்குறள்.**

1. ஒரு வார்த்தையைக் கேட்டதுபோலச் சொல்லாமையும், பார்த்த வொரு பொருளை அப்படியே தெரிவிக்காமையும் **பொய்யாகும்**. பொய் சொன்னாலும் அது பாபமே. பொய் சொல்லுகிறவனை அல்லது சொன்னவனைப் பொய்யனென்றும், பித்தலாட்டக் காரனென்றும் அழைக்கின்றோம். உலகத்தில் நல்ல புகழோடு இருக்க ஒருவன் விரும்பினால், அவன் பொய் சொல்லாமல் இருக்கவேண்டும். பொய் சொல்லாமல் இருந்தால் அதுவே அவனுக்குச் சகலவிதமான புண்

ணியத்தையுந் தரும், என்று நீதி நூல்கள் கூறுகின்றன.

"ஒன்ருக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று"

என்றும்,

"பொய்யாமை யன்ன புகழில்லை பொய்யாமை
யெல்லா வறமுந் தரும்" —திருக்குறள்.

என்றும் சொல்லிப் பொய் சொல்லுவதைக் கூடாது என்று தடுத்திருக்கின்ருர்கள்.

3. ஒருவரால் கொடுக்கப்படாம லிருக்கும் பொருளை, அல்லது விழுந்துகிடந்த ஒரு பொருளைத் தான் அபகரித்துக்கொள்ளுதல், அல்லது அதை மற்றவர்களுக்குக் கொடுத்துவிடுதல் போன்ற காரியங்களுக்குத் **திருடு** அல்லது **களவு** என்று பெயர். இவை போன்ற காரியங்களைச் செய்பவனைக் களவாளி என்கிருேம். இவைகளும் மிகப் பாபகரமான செயல்கள் தாம். ஆகையால், இவைபோன்ற காரியங்களையும் செய்தல் கூடாதென்று அறநூல்கள் கூறுகின்றன.

"உள்ளத்தா லுள்ளலுந் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தாற் கள்வே மெனல்" —திருக்குறள்.

4. அன்னிய ஸ்திரீகளைச் சேர்தல், அல்லது அவர்களைச் சேர விரும்புதல், அவர்களிடம் கேலி வார்த்தையாடுதல் போன்ற காரியங்களுக்குத் **தீயவொழுக்கம்** என்று பெயர்; இவை மிகுந்த பாபகரமான செயல்களாம். இவைகளைச் செய்கிறவனைக் காமி என்கிருேம். ஆகவே மேலே சொல்லப்பட்ட காரியங்களையும் செய்தல் கூடாவாம். நாம் அப்படிச்

செய்தாலும் நமக்கு எவ்விதக் கெடுதிகள் அணுகு கின்றன வென்பதைப் பின்வருங் குறளா லறிக:—

"பகைபாவ மச்சம் பழியென நான்கு
மிகவாவா மில்லிறப்பான் கண்" —திருக்குறள்.

அதாவது, கெட்ட ஒழுக்கத்தை யுடையவனைப் பகை, பாவம், பழி, பயம் எனு மிந்நான்கும் விட்டு நீங்க மாட்டா. ஆகையால் இப்படிப்பட்ட காரியங்களை யும் செய்தல்கூடா வென்று பெரியோர்கள் தடுத் திருக்கின்றார்கள்.

5. தனக்குரிய வஸ்துக்களில் பற்று வைப்பது, அதாவது காணி-பூமி, வீடுவாசல், தன தானியம், ஆடு, மாடு, துணிமணி ஆகிய இவைகளில் ஆசைவைப் பதும், இவற்றைச் சேர்ப்பதில் ஆசைகொள்ளுதலும் ஆகிய இக் காரியங்களுக்குப் **பரிக்ரஹம்** என்று பெயர். இப் பரிக்ரஹத்தைச் செய்பவன் அல்லது கைக் கொள்ளுகிறவன் உலோபி யாகின்றான். உலோபம் என்பது ஒருவித பற்றுதலுக்குப் பெயர். இப் பற்று இருவகைப்படும். அவை, அகப்பற்று, புறப்பற்று என் பனவாம். இவ்விருவித பற்றும் தொலைந்தபொழுதே ஒருவனுக்குத் தன் பிறப்பும் ஒழியும். அப்பற்றுக ளறுத பொழுது பிறந்துழன்று இறக்கும் நிலையில்லாத் தன் மையே அவனுக்கு ஏற்படும் எனும் கருத்தை வலி யுறுத்து மென்பதைப் பின் வரும் குறளால் அறிய லாகும்.

"பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கு மற்று
நிலையாமை காணப் படும்" —திருக்குறள்

பயிற்சி

1. பதிலெழுது :—

(1) பஞ்சமஹா பாபங்கள் எவை?
(2) ஐ வகைப் பாபங்களையும் தனித்தனியாகப் பிரித்து உதாரணத்துடன் எழுது.

(3) ஐவகைப் பாபங்களையும் செய்தல் கூடாது என்ற கருத்துக்களுள்ள 5 குறட்பாக்களைச் சொல்.

2. பொருளறிந்துகொள் :—

கெட்ட நடத்தை - தீயவொழுக்கம். பரிக்ரஹம் - பற்று. அறநூல் - தருமசாத்திரம். களவாளி - திருடன். தெரிவித்தல் - சொல்லுதல்.

---

11. கஷாயம்

ஆத்துமனையடுத்து அதற்குத் துக்கத்தைத் தருவது கஷாயம். இக் கஷாயம் நான்கு பிரிவுடையது. அவை 1. குரோதம், 2. மானம், 3. மாயை, 4. உலோபம் என்று சொல்லப்படும். இவற்றில்,

1. குரோதமாவது——கோபம்.

2. மானமாவது——கர்வம்.

3. மாயையாவது——கபடம். அதாவது, மனத்தில் நினைப்பதுவொன்று வாயினுல் சொல்லுவது மற்ருென்று, செயலில் செய்வது பிறிதொன்று.

4. உலோபமாவது——பேராசை. இந்தப்பேராசையே மேலே சொல்லியுள்ள நான்கு வித கஷாயங்களால் பந்திக்கும் பாபத்திற்குக் காரணமாகும். அதுமட்டிலுமன்றி, இப் பேராசையே, ஜீவனுக்கு அதிக துக்கத்தைத் தரக்கூடியது.

ஆகையால், நாம் கஷாயத்தின் வயப்படாமலிருக்க வேண்டும். அதாவது அக் கஷாயங்களைத் தடுப்பதற்கு ஏதுவான காரியங்களைச் செய்தல் வேண்டும்.

1. மொழிப்பயிற்சி :—

வயப்படல், பந்தம், ஏதுவான, உலோபம், உதவாத, மாந்தர், கஷாயம் இவ் வார்த்தைகளின் கருத்துக்களைத்

தெரிந்துகொண்டு, உனக்கிஷ்டமான ஒவ்வொரு வாக்கியத்திலும் ஒவ்வொரு வார்த்தையைச் சேர்த்தெழுது.

2. கீழே தரப்பட்டிருக்கும் வாக்கியப் பகுதிகளை முழுவாக்கியங்களாக மாற்றி அமை?

நாம் கஷாயத்தின்———

ஆத்துமனை யடுத்து அதற்கு———

ஆத்துமனைப் பந்திக்கும் பாபத்திற்குக்———

தீய ஒழுக்க முடையவனைக்———

மற்றவரது பிராணனைப் போக்குந் தொழிலுக்கு———

ஐவகைப் பாபங்கள், அவை———

வாயுவையே சரீரமாக வுடைய———

---

12. பிறவி அல்லது கதி

கதி என்றால் பிறவி. ஒவ்வொரு ஜீவனுக்கும் தான் தங்கி நின்ற சரீரத்தைவிட்டு, வேறு சரீரத்தில் தங்கப் புகுங்காலே இப் பிறவி ஏற்படுகிறது. இப்படிப்பட்ட கதி அல்லது பிறவி நான்கு. அவை, 1, நரககதி 2, விலங்குகதி, 3, மனிதகதி 4, தேவகதி. இவற்றில்,

1. **நரககதியாவது**:—பாதாளத்திலுள்ள நரகலோகங்கள் மிகவுந் துக்கத்தைத் தரக்கூடியன. ஆங்குள்ள ஜீவன்கள் எப்பொழுதுமே துக்கத்தை அனுபவிக்கின்றன. சுக மென்பது கொஞ்சமும் இல்லை; மனித அல்லது விலங்குகதியி லுள்ள ஜீவன்கள் இறந்து, மறுபடியும் அவை இந்த நரககதியில் பிறவியெடுத்தால், அப்பொழுது அவைகள் நரககதியடைந்தன வென்று கருதப்படும். இந்த நரககதியி லுள்ள ஜீவன்கள் பஞ்சேந்திரிய ஜீவன்களே யாகும்.

2. **விலங்குகதியாவது**:—தாவர ஜீவன்களுக்கும், மிருக பக்ஷியினங்களுக்கும், அதாவது, ஊர்வன, தத்துவன, பறப்பன, போன்றவைகளுக்கு விலங்குகதி

ஜீவன்கனென்று பெயர். விலங்குகதி ஜீவன்களை வட மொழியில் திரியன்ச ஜீவன்கனென்று சொல்லப் படும். ஒரு ஜீவன் தன்னிலை மாறி (இறந்து) இவ் விலங்குகதியில் பிறவி யெடுத்தால், அப்பொழுது அது விலங்குகதி ஜீவனுகிறது. இக் கதியில் ஓரறிவுடைய ஜீவன் முதல் ஐயறிவுள்ள ஜீவன்கள்வரை யுள்ள சகல ஜீவன்களும் இருக்கும்.

3. **மனிதகதியாவது**:—ஒரு ஜீவன் தனது நிலையானது மாறி வேறுநிலையாகிய மனிதப் பிறவியை அடையும் பொழுது அது மனித கதி ஜீவனுகின்றது. இம் மனித கதியில் (தர்மத்தை வளர்க்கத் தக்க புண்ணியத்தைச் செய்த)மனத்தோடு கூடிய ஐயறிவுடைய ஜீவன்கள் மட்டிலும் இருக்கும்.

4. **தேவகதியாவது**:—இக் கதி மிக மேன்மையானதும் கிட்டாதது மாகும். இக் கதியிலுள்ள தேவர்கள், இரவும் பகலும் சுகத்திலேயே ஆழ்ந்திருப்பார்கள். இக் கதியில் பிறவியெடுக்கும் ஜீவன்கள் மிகப் புண்ணியத்தைக் செய்ததாகும். இக் கதியிலும் ஐயறிவுடைய ஜீவன்களே இருக்கும்.

“விண்ணோ ருருவின் எய்திய நல்லுயிர்
மண்ணோ ருருவின் மறிக்கினும் மறிக்கும்
மக்கள் யாக்கை பூண்ட மன்னுயிர்
மிக்கோய் விலங்கி னெய்தினு மெய்தும்
விலங்கின் யாக்கை விலங்கிய வின்னுயிர்
கலங்கஞர் நரகரைக் காணினுங் காணும்
ஆடுங் கூத்தர்போ லாருயி ரொருவழிக்
கூடிய கோலத் தொருங்குநின் றியலாது”

என்பது சிலப்பதிகாரம்.

பயிற்சி

1. அதே பொருளுள்ள மறுவார்த்தைகள் சொல் :—
கதி, துக்கம், அறிவு, விலங்கு, மட்டிலும், மேன்மை யான, கிட்டாத, ஆசை, குணம்.

2. பாம்பு, தவளை, ஆமை, கொக்கு. கழுதை, குரங்கு, ஈ, தேள், மீன், வண்டு, புழு, புலி, மனிதன், கிழவி, தேவன், மாணவன், நரகன், முதலான ஜீவன்க ளின் தனித்தனி கதி என்னவென்று பிரித்தெழுது.

3. விடுபட்ட சொற்களைக் கண்டுபிடித்து வாக்கியத்தைப் பூர்த்தி செய் :—

(1) நிலத்தில் வாழும் ஜீவனுக்கு —— ——பெயர்.
(2) மீன், நத்தை, சிப்பி முதலியன —— ஜீவன்களாகும்.
(3) நபசர ஜீவன்கள் —— —— —— முதலியன.
(4) நால்வகைப் பிறவிகளிலும் —— —— ப்பிறவி.
(5) பஞ்சேந்திரிய ஜீவன்கள் —— —— பிறக்கும்?

4. விடை சொல் :—

1. கதிகளில் மிகவும் மேலானது எது?
2. நீ எந்தக் கதியில் இருக்க விரும்புகிறாய்? அது ஏன்?
3. நரக கதி, மனிதகதி இவற்றில் எது நல்லது? எப்படி?
4. பாபத்தைச் செய்கிற ஜீவனும், புண்ணியத்தைச் செய்கிற ஜீவனும் எந்தக் கதியில் பிறவியெடுக்கும்?

5. திருப்ப லப்பியாசம் :—

1. எந்தப் பாடத்தில் விகலத்திரயமென்னும் வார்த்தை வந்திருக்கின்றது?
2. கஷாய பாடத்தில் நீ அறிந்துகொண்டது என்ன?.
3. உன் பாடசாலைப் பிள்ளைகள் தினந்தோறும் காலை யில் பஞ்சநமஸ்கார மந்திரம் சொல்வது உண்டா?
4. ஆத்மனுக்கு அதிக துக்கத்தைக் கொடுப்பது எது?

---

13. அனுப்பிரேக்ஷை அல்லது பாவனை

அனுப்பிரேக்ஷை அல்லது பாவனை யென்றால், வாழ்க்கையி லேற்படும் அனுபவ நிகழ்ச்சிகளைக் கொண்டு ஒரு விஷயத்தைப் பாவிப்பது அல்லது தீர்மானித்தலுக்குப் பெயர். அப்படிப்பட்ட பாவனைகள் 12. அவை:—

1.	அனித்தியபாவனை	7.	ஆஸ்ரவ பாவனை
2.	அசரண ,,	8.	ஸம்வரா ,,
3.	சம்சார ,,	9.	நிர்ஜரா ,,
4.	ஏகத்துவ ,,	10.	லோக ,,
5.	அன்னியத்துவ	11.	தர்ம ,,
6.	அசுசி ,,	12.	போதி துர்லப

இவற்றில்,

1. **அனித்திய பாவனையாவது**:—இச் சரீரம் அழியக்கூடியது. உலகில் பிறந்த அரசன் முதல் ஆண்டிவரை யாவரும் என்றைக்கிருந்தாலும் ஒரு நாளைக்கு அழியவேண்டியவர்களே என்றால் இறந்து பட வேண்டியவர்களே. மேலும் மேலும் பிறவி யெடுத்து இறக்க வேண்டியவர்களே யென்று பாவித்து, அவ் வழிவுள்ள சுகத்தைத் தேடுதல் நியாய மல்ல வென்று தன் ஆத்மனை விளித்து, அதை என் றும் நிலையான சுகத்தை நாட முயற்சி செய் என்று கூறுவதுபோல் பாவிப்பதாகும்.

2. **அசரண பாவனையாவது**:—சகல பிராணி களும் பார்க்கும் பொழுதே அழிவை அடைகின்றன. மரணம் எந்தக் காவலுக்கும் தடைபடுகிறதில்லை. மந்திர தந்திரங்களாலும், சுற்றத்தார்களாலும் அதைத் தடுக்க முடிகிறதில்லை. புண்ணியத்தாலன்றி

அதைத் தடுக்க வேறு எதனலும் முடியாது. அதாவது அடைக்கலங்கொள்ள எதுவுங் கிடையாது. எனவே, ஆத்துமன் அலைகடல் துரும்புபோல் இருப்பதை யறிந்து, அவ்வாத்துமனைத் தன்னுடைய நிலைமையை அகற்றிக்கொள்ளுமாறு சொல்வது போல் பாவித்தலாம்.

3. **சம்சார பாவனையாவது** :—பாபத்தினல் நரகத்திலும், பாப புண்ணியத்தால் பூலோகத்திலும் பிறந்து உழல்கின்றன ஜீவன்கள். இதை யறிந்து தன்னத்மனிடம், அது எந்தக் கர்மவசத்தால் மேலும் மேலும் பிறவியெடுத்து அல்லல்படுகிறதோ அந்தக் கர்மத்தைப் போக்க, அவ்வாத்மன் கணமும் தாமதியாமல் முயற்சி செய்ய வேண்டுமென்று பாவிப்பதாகும்.

4. **ஏகத்துவ பாவனையாவது** :—இச் சரீரம் சாம்பலாகு மட்டிலும், சம்பாதித்த பொருள் வீடு மட்டிலும், சுற்றத்தார் சுடுகாடு மட்டிலும் என்பதையுணர்ந்து, தன்னத்மனை நோக்கி, ஹே ஆத்மாவே! உனக்கு உலகப் பொருள்கள் எவையும் சதமல்ல! உன்னை விடாமலிருப்பது கர்ம மொன்றுதான். ஆகையால் நீ பாப கர்மங்களை நீக்கி, நற்கருமங்களைச் செய்து முக்தியைப் பெறுவையாக வென்று பாவிப்பதாகும்.

5. **அன்னியத்துவ பாவனையாவது** :—ஆத்மனை விளித்து, ஹே! ஆத்மாவே! கர்ம வசத்தினல் உனக்குச் சரீரத்தோடு சேர்க்கை யேற்பட் டிருக்கிறது. எனவே நீ உறையிலிட்ட கத்தியைப்போலிருக்கின்ருய். ஏனெனில், அது உன் தீவினையின் பலன். ஆகவே நீ இனியும் தீவினைகளைச் செய்து

பயனற்ற சரீரத்தைப் பெருமல், பயனுடைய முக்தியைப் பெறு என்று பாவிப்பதாகும்.

6. **அசுசி பாவனையாவது** :—அசுசியையும் வெறுப்பையுந் தரும் மலத்தைக் காரணமாக உடையது இச் சரீரம். அதாவது, கர்ம சிற்பியின் திறமையால் மேலுக்கு மட்டிலும் ரமணீயமாய்த் தோன்றும்படி ஆக்கப்பட்டது. உற்று நோக்கினுல் அதில் ஒன்றுமில்லை. ஆகவே, ஆத்மனே! அசுசியாகிய இவ்வுடலை நீக்கி, நித்திய சுகத்தைப் பெற நீ முயற்சிப்பாயாக வென்று பாவிப்பதாகும்.

7. **ஆஸ்ரவ பாவனையாவது** :—ஆத்மனிடம், ஹே! ஆத்மாவே! நீ, கர்மத்தால் மறைக்கப்பட் டிருக்கிற வரையில், அதை விட்டுப்பிரிய முடியாது. அதுவே உனக்குச் சஞ்சலமாகவிருக்கும். எனவே, நீ, இன்ன கர்மத்திற்கு இன்னது ஆஸ்ரவ மென்றுணர்ந்து, அதன் காரணத்தைப் போக்கி, கர்மங்களை நீக்கி முக்தியை யடைய முயலுவாயாக வென்று பாவிப்பதாகும்.

8. **ஸம்வரா பாவனையாவது** :—கர்ம ஆஸ்ரவங்கள் தகர்ந்தொழிவதால், துவாரமற்ற மரக்கலம் போல் பயமற்றிருக்கமுடியும். எனவே, ஹே! ஆத்மனே! நீ வெளி விஷயங்களில் பற்றற்று நித்தியமாகிய மோக்ஷத்தைப் பெறப் பாடுபடுவையாக வென்று பாவித்தலாகும்.

9. **நிர்ஜரா பாவனையாவது** :—கர்மத்தை நீக்குவதாலும் அல்லது அதன் குணங்களை அறவே நீக்குவதாலும், அதன்மூலம் ஏற்படும் ஆஸ்ரவத்திஞலும் நீ முக்தியடையமுடியும். இரத்தினத் திரயமென்னும், நற்காட்சி, நன்ஞானம், நல்லொழுக்க முதலியவற்றின்

முடிவால் உயர்நிலை யெய்துவாய். ஆகவே, ஆத்மனே! நீ தன்னையன்றிய வெளி விவகாரங்களில் உழன்றிராமல் புலன்களை யடக்கி என்றுங் குறைவுபடாத பேற்றை யடைய முயற்சி செய்யென்று பாவிப்பதாகும்.

10. லோக பாவனையாவது:—பிறப்பிறப்பிற் கிடமாகிய எல்லையற்ற பிரதேசங்களையுடைய இவ்வுலகத்தில், அளவற்ற முறை பிறந்து இறவாத பிரதேசங் கிடையாது. அதாவது, மாறுபாடடையாத வொன்றுங் கிடையாது. அறிவின்மை யெனு மஞ்ஞானமே இதில் பிறவியெடுக்கக் காரணமா யிருக்கின்றது. எனவே, ஆத்மனே! நீ மேற்சொன்னவற்றையறிந்து, அவற்றைப் போக்கவேண்டி அதற்கான தவத்தை மேற்கொள்ளப் பாடுபடு என்று பாவிப்பதாகும்.

11. தர்ம பாவனையாவது :—தர்மபுத்தி யில்லாவிடில் மானிடப் பிறவி வீணே யாகும். தர்மமே இஷ்டமான எதையும் அளிக்கவல்லது. தர்மம் ஒருவனை உயர்த்தும்; அதர்மம் ஒருவனைத் தாழ்த்தும். ஆகையால், ஆத்மனே! நீ மேற்சொன்ன விஷயங்களைச் சதா சிந்தித்து அதன்படி நடந்தும், ஜீவன்களிடம் கருணைகொண்டு அதன்படி நடந்தும் அதனுலாகும் புண்ணியத்தைத் தேடுவையாக வென்று பாவிப்பதாகும்.

12. போதி துர்லபபாவனை யாவது :—தருமம் செய்தவன், உலகில் வருந்துவதில்லை. அவனை யாவருங் கொண்டாடுகின்றனர். இகத்தில் மாத்திரமன்றி அவன் பரத்திலும் சுகமடைகின்றான். ஆத்மனே! நீ, இவற்றை யறிந்துகொள்வதுடன், ஜீவன்களுக்கு

இதமான காரியங்களைச் செய்துகொண்டிரு. அதுவே முக்தியைத் தரும் என்று பாவித்தலாகும்.

பயிற்சி

1. பொருளறிந்துகொள் :—

பாவனை - கருதுதல், நிகழ்ச்சி - சம்பவம், விளித்தல் - அழைத்தல், சுற்றத்தார் - உறவின் முறையார், உழலுதல் - திரிதல், அலைதல், கணம் - விநாடி, உணர்ந்து - தெரிந்து, நோக்கி - பார்த்து, ரமணீயம் - அழகு, சஞ்சலம் - துக்கம், மரக்கலம் - கப்பல், பற்றுதல் - ஆசை, எய்துதல் - அடைதல், பேறு - மோக்ஷம், அசங்கியாத - எல்லையற்ற, பிரதேசம் - இடம், சிந்தித்து - நினைத்து, இகம் - இவ்வுலகம், பரம் - மோக்ஷம், இதம் - நன்மை.

2. விடை சொல் :—

(1) பாவனை யென்றாலென்ன?
(2) நான்காவது பாவனையையும் அதன் கருத்தையும் விளக்கு.
(3) நீ இப்பாடத்திலிருந்து தெரிந்துகொண்டது என்ன?
(4) எந்தப் பாவனையை உன்னால் நன்றாகச் சொல்ல முடியும்?
(5) பாவனைகள் எத்தனை? அவற்றின் பெயர் என்ன?
(6) இப்பாவனைகள் மனிதனுக்கு மட்டிலு மேற்படுகின்றனவா? அன்றிச் சகல ஜீவன்களுக்கு மேற்படுகின்றனவா?

ஜைன தர்ம முதற்பாடப் புத்தகம் முற்றிற்று.

குறைந்த விலை! **குறைந்த விலை!!**

திருக்குறள் ஆராய்ச்சியும், ஜைன சமய சித்தாந்த விளக்கமும்

விலை ரூ. 2—0—0

கிடைக்குமிடம் :—

T. A. அநந்தநாத நயினார் அண்டு ஸன்ஸ்,
பட்டு ஜவுளி வியாபாரம்,
ஆடிசன்பேட்டை,
காஞ்சிபுரம்.

Printed at the Rajan Electric Press, G. T. Madras.

திருப்பறம்பூர்
ஸ்ரீ அகளங்கர் அறிவுக் கழகத்தின் நோக்கம்.

---

1. உயரிய கருத்துக்களையுடைய, ஜைனமதக் கொள்கைகளையும், பிற மொழிகளிலுள்ள, அறிவு வளர்ச்சிக்கான நூல்களையும் தகுந்த அறிஞர்கள் மூலமாகத் தமிழில் மொழிபெயர்த்து, எளிய நடையில் உயர்ந்த கருத்துகளடங்கிய நூல்களை வரிசையாக வெளியிடுதல்.

2. ஜைனமத தத்துவங்களைப் பிறரும் அறியும் படியான விதத்தில் சிறு சிறு நூலாக வெளியிடுதல்.

3. கழகத்தில் வெளிவரும் நூல்களை விலை குறைவாகக் கொடுத்துத் தமிழ் நாட்டிலுள்ள ஜைனமதக் கல்வி கற்றுவரும் சிறுவர், சிறுமிகளை வாசிக்கச் செய்தல்.

4. ஜைன தர்மத்தைச் சார்ந்த சிறுவர்களது பாடத்திற்கான பாடப்புத்தகங்களை, தகுந்த கல்வி அறிஞர்களால் எழுதவைத்து, அவற்றை விரைவில் வெளிப்படுத்திப் பாடசாலைப் பிள்ளைகளைப் படிக்கச் செய்ய, கல்வி ஸ்தாபனங்களின் அதிகாரிகளை வேண்டிக்கொள்ளல்.

5. இக்கழகம் வியாபார நோக்கத்துடன் தோன்றியதல்ல. எனவே, இதில் வெளியாகும் நூல்கள் மிக மிகக் குறைந்த விலைக்குக் கிடைக்குமென்பதைச் சகலரும் அறிந்துகொள்ளும்படி செய்தல்.

அறிவிப்பு :—இதற்கடுத்தபடியாக இந் நூல் வரிசையில் இரண்டாவதாகவுள்ள இரண்டாம் பாடப் புத்தகமும், முறையே மூன்றும், நான்காம் பாடப் புத்தகங்களும் வெளிவரும். இரண்டாம் புத்தகமும் மூன்றும் புத்தகமும் அச்சில் இருக்கின்றன. அடுத்தபடியாக "விதவையர் கடமை" என்னும் நூலும், "பெண்கல்வி முறை" என்னும் நூலும் வெளிவரும்.

ஸ்ரீ

இக் கழகத்தில் கிடைக்கும் புத்தகங்கள்

1. ஸ்வப்னஸ்தவம்
   ஸ்ுப்ரபாதம்
2. ஜைன சித்தாந்த முதற் புத்தகம்
3. கிரியா புத்தகம் 2-ம் பாகம்
4 அருங்கலச் செப்பு
5. ஜ்வாலா மாலினி சோபனமாலை
6. சின்ன புஷ்பாஞ்ஜலி பெரிய புஷ்பாஞ்ஜலி சாந்தியஷ்டகம்.
7. ஜின பாரதம்
8. ஜிஞனந்தம்
9. க்ஷத்திர சூடாமணி
10. சிந்தாமணி வசனம்
11. மேருமந்தரர் வசனம்
12. பக்தாமரம் (தமிழ் உரையுடன்)
14. உதயணன்
15. ஜீவகன்
16. திருப்பாமாலை
17. நரி விருத்தம்
18. பூபால ஸ்தோத்திரம்
19. இலக்கணையார் குறம்
20. தீர்த்தங்கரர் பேர்வழி
21. சமஸ் கிருத பாலசிக்ஷை (கிரந்த அக்ஷர மாலா.)
22. தத்வார்த்த சூத்திரம். (அச்சில்)
23. இளங்கோவடிகள் சமயம் யாது ? (விரிவான ஆராய்ச்சியுடன்கூடிய இரண்டாம் பதிப்பு விரைவில் வெளிவரும்.)